தமிழ்நாடு ● மகளிர் நல மேம்பாட்டு ●

முற்றம்

விலை ரூ. 5/- மலர் 13 இதழ் 2 ஜுன் 2011 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை



டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்.

அனைத்துத் துறைகளிலும் மகளிர் தங்களின் பங்களிப்பை செலுத்தி வருகின்றனர். இதனை மேலும் அதிகப்படுத்திடும் வண்ணம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நலத் திட்டங்களை ஒருங்கிணைத்து அதன் பயனை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர் தம் குடும்ப உறுப்பினர்களும் பயன் பெறும் வகையில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அரசுத் துறைகளான வருவாய் துறை, சமூக நலத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தொழில் துறை, விவசாயம், வனத் துறை, ஆதிதிராவிடர் நலம், தோட்டக்கலை, கால்நடைத்துறை, பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை போன்ற துறைகளின் நலத் திட்டங்களை மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பயன் படுத்தி, குடும்ப அட்டை பெறுதல், மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் மூலமாக உரிய பயனாளிகளுக்கு அடையாள அட்டைகள் பெறுதல், பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுழல் நிதி, தொழிற்கடன் மற்றும் தொழிற்பயிற்சி பெறுதல், ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கான நலத்திட்ட உதவி களைப் பெறுதல், நியாய விலைக் கடைகளை ஏற்று நடத்துதல், கறவை மாடுகள் மற்றும் கால்நடைகள் வாங்க கடனுதவி பெற்று பால் உற்பத்தி யில் ஈடுபடுதல் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பொருளாதார முன்னேற்றம் பெற வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

இதனை செயல்படுத்த கிராம அளவில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைக் கண்டறிந்து பட்டியலிட்டு, மனுக்கள் பெறப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின் கீழ் நடைபெறும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், மனுக்களை பரிசீலனை செய்து, அவைகளின் மீதான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய பல துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு மூலம் சுய உதவிக் குழுக்களின் அனைத்து வகையான தேவைகளும் முழுமையடைந்து சமூக மற்றும் பொருளாதார அளவில் மேம்பாட்டினை அடைந்து தன்னிறைவு பெறுவார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எனவே இதனை தகுந்தபடி பயன்படுத்திப் பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலாண்மை இயக்குநர்

"பல்வேறு துறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம், அவற்றின் நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகளை அனைவரும் அறிந்து கொள்ள முடியும். இந்த ஒருங்கிணைப்பின் பயனாக வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மகளிர் பயன்கள் பலவற்றை பெற முடியும். தமிழ்நாடு மகளிர் நிறுவனம் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது."

உள்ளே...

கடிதங்கள் – 3

குழுவாய் இணைந்து வெற்றிகள் பல பெற்று வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளை மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றத்திற்கு எங்கள் குழுவின் சார்பில் பாராட்டுக்கள்.

வெற்றிக் கதை – 4

தங்களின் குழுவின் வெற்றிக்காகவும், வளர்ச்சிக் காகவும் சிறப்பாக செயல்பட்டு வரும் இக்குழுவின் உறுப்பினர்கள், பொருளாதார சுய சார்பு பெற்று தங்களின் ஏழ்மை நிலையில் இருந்து மீண்டு வந்துள்ளனர்.

அரசு செய்திகள் – 11

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்துள்ள இத்திட்டத்தால், தமிழ்நாட்டில் உள்ள அரிசி பெற தகுதி வாய்ந்த ஒரு கோடியே 84 இலட்சத்து 53 ஆயிரத்து 750 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைவார்கள்.

மாவட்டச் செய்திகள் – 12

மகளிர் திட்ட செயலாக்க அலகு மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு நேர்காணல் நடத்தப்பட்டு அவர்களுக்கு பல்வேறு துறைகளில் தொழிற்திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

உடல் நலம் – 24

B வைரஸ் கல்லீரல் அழற்சி நோய் ஆபத்தான ஒரு நோயாக இருந்தாலும், தடுப்பூசிகள் உள்ளன. இந்த தடுப்பூசிகள் முழுமை யாக நோய் ஏற்படாமல் தடுக்கும் தன்மை வாய்ந்தவை.

வாழ்ந்து காட்டுவோம் – 27

அவர்களின் பிள்ளைகளை பள்ளியில் சேர்த்து, ஒவ்வொரு வருடமும் ஆடைகள் மற்றும் எழுது பொருட்கள் இலவசமாக வழங்கியும், பள்ளி பிள்ளைகள் 21 பேருக்கு அரசின் மூலமாக சாதி சான்றும் பெற்றுத் தரப்பட்டது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு

முற்றம்

மலர் 13 இதழ் 2 ஜுன் 2011 விலை ரூ. 5/-

கௌரவ ஆசிரியர்
டாக்டர். K. கோபால், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

■

ஆசிரியர்
திரு. எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

■

நிர்வாக ஆசிரியர்
திருமதி. எப். இன்னசென்ட் திவ்யா
பொது மேலாளர்

■

ஆசிரியர் குழு
திருமதி. ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. மாலதி ஹெலன்
தகவல் தொடர்பு வல்லுநர்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

■

பொறுப்பாசிரியர்
திருமதி. அ. அமுதா
மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு)

■

அனுப்புகை உதவியாளர் - முற்றம்
திரு. ஏ. கண்ணன்

■

கணக்கர்
திருமதி. சு. சசிகலா

■

கணினி வடிவமைப்பு
திரு. சு. ஸ்ரீ ராம்

■

பிழை திருத்துபவர்
திரு. எஸ். எஸ். ரவிச்சந்திரன்

■

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தபால் பெட்டி எண். 3226
100, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை - 600 032.
தொலைபேசி: 044-42085804/05/06
தொலைநகல்: 044-4202 7635,
044-2235 2751

www.tamilnaduwomen.org/mutram
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

■

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து

ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!

அன்புள்ள வாசகர்களுக்கு,

தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்றுள்ளதை இலட்சக் கணக்கான மகளிர் குழுக்களின் சார்பில் முற்றம் வாழ்த்தி வரவேற்கின்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சராக செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பொறுப்பேற்றுள்ளதால், மகளிர் திட்டத்தில் பல புரட்சிகரமாக செயல்பாடுகளை தமிழக பெண்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். காரணம், சுய உதவிக் குழுக்கள் தமிழ்நாட்டில் ஒரு பெரிய இயக்கமாக உருவெடுத்து, அனைத்து பெண்களின் மகிழ்ச்சிக்கும், எழுச்சிக்கும் வழிவகை பிறக்கும் என்ற நம்பிக்கை பரவலாக நிலவி வருவதை அனைவரும் அறிவோம்.

சுய உதவிக் குழுக்கள் வெறும் கடன் பெறும் குழுக்களாக மட்டுமே அல்லாமல் பெண் கல்வி, பெண் உரிமை, பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்து குரலெழுப்புவது, பெண்களிடையே தலைமை பண்புகளை வளர்ப்பது, சமுதாய பணிகளில் பங்கேற்பது போன்ற சமூக சிந்தனையோடு கூடிய செயல்பாடுகளிலும் ஈடுபட வேண்டும். அவ்வாறு செயல்பட்டால் தான் இத்திட்டத்தின் நோக்கம் முழுமையடையும். இதற்கானத் திட்டங்களை புதிய அரசு உருவாக்கி கொடுக்கும் என நம்புகின்றோம்.

மகளிர் குழு உறுப்பினர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் சிறப்பான கவனத்தை செலுத்த வேண்டும். போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தில் தங்கள் பிள்ளைகளையும், பல்வேறு சவால்களை எதிர் கொள்ளும் அளவிற்கு பயிற்றுவிக்க கற்றுக் கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்கு செல்லம் கொடுத்து வளர்ப்பதை விட நல்ல பயிற்சியினை கொடுக்க வேண்டியது அவசியமானது.

இதைத்தான் மகாகவி பாரதியார் அவர்கள் மிக சுருக்கமாக கூறுகிறார். 'ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா, காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு, மாலை முழுவதும் விளையாட்டு' இந்த வரிகளிலிருந்து குழந்தைகள் எவ்வாறு பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

வீடுகளில் பிள்ளைகள் அமைதியாகப் படிப்பதற்கான சூழலை அமைத்துக் கொடுங்கள். படிக்கும் நேரங்களில் தொலைக்காட்சி பார்ப்பதை தவிர்த்து விடுங்கள். சரியான நேரத்தில் குழந்தைகளுக்கு சத்தான உணவு வகைகளைக் கொடுங்கள். முடிந்த அளவிற்கு அவர்களால் முடிந்த வேலைகளை அவர்களே செய்யுமாறு பயிற்றுவியுங்கள். இவைகள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல வளர்ச்சியைக் கொடுக்கும். வாழ்க புதிய அரசு!

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
முற்றம் ஆசிரியர்

அடைந்தோம் மகிழ்ச்சி!

இளைஞர்களின் வாழ்வு வளம் பெற ஏதுவாக மகளிர் திட்டம் சார்பில் வழங்கப்பட்டு வரும் தொழிற்பயிற்சிகள் குறித்த கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது.
நாளுக்கு நாள் நல்ல பல செய்திகளை தாங்கி வரும் முற்றம் இதழைக் கண்டு அடைந்தோம் மகிழ்ச்சி. தொடர்ந்து இதுபோன்ற பயனுள்ள கட்டுரைகளை வெளியிட வேண்டுகிறோம்.

இப்படிக்கு,
திருமதி. திலகவதி ஜெகந்நாதன்
வெண்புறா மகளிர் சுய உதவிக் குழு,
அம்மாப்பேட்டை, சேலம் மாவட்டம்.

வாழ்க! வளர்க!!

குழுவாய் இணைந்து வெற்றிகள் பல பெற்று வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகளை மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றத்திற்கு எங்கள் குழுவின் சார்பில் பாராட்டுக்கள். கண்கவரும் வண்ணப் படங்கள், கருத்துமிக்க கட்டுரைகள், மருத்துவக் குறிப்புகள், மகத்தானவர்களின் வரலாறு என பல்சுவைகளைத் தாங்கி வரும் முற்றம் இதழே நீ வாழ்க! வளர்க!

வாழ்த்துக்களுடன்,
சாதனைப் பெண்கள் மகளிர் குழு,
மதுராந்தகம், காஞ்சிபுரம் மாவட்டம்.

மகத்தான திட்டம்!

வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் கிராம மக்களின் வறுமையை நீக்கி வரும் மகத்தான திட்டம் வாழ்ந்து காட்டுவோம் திட்டம். ஏழை எளியோருக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் தொழிற்பயிற்சிகள் பல வழங்கி, வங்கிக் கடன் அளித்து தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்து அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு நன்றிகள் பல!

அன்புடன்,
திருமதி.விஜயலட்சுமி குமரன்
செம்மீன் மகளிர் குழு,
கும்பகோணம், தஞ்சை மாவட்டம்.

“மகளிர் முன்னேற்றத்திற்கு உறுதுணையாய் இருக்கும் முற்றம் இதழிற்கு சந்தா செலுத்தி உறுப்பினர்களாகி முற்றம் இதழ் மேலும் மேலும் சிறப்பாய் வளர வாழ்த்துங்கள்!”

தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள், கவிதைகள், உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். மேலும் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும்.

– ஆசிரியர், முற்றம்

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com wdcmutram@gmail.com

பரவசமூட்டும் பரிசு பொருட்களை தயாரிக்கும்

ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழு

தமிழகத்தின் தலைநகராம் சென்னையில், கொடுங்கையூர் கவியரசு கண்ணதாசன் நகரில் செயல்பட்டு வருவது ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழு. மகளிர் திட்டம் மூலம் அளிக்கப்பட்ட அடிப்படை பயிற்சிகள் மற்றும் தொழிற்பயிற்சிகளை இக்குழுவின் உறுப்பினர்கள் பெற்றுள்ளனர். வங்கியில் பெற்ற பொருளாதாரக் கடன் தொகையை மூலதனமாகக் கொண்டு மென் பொம்மைகள், நவநாகரீக பரிசு பொருட்கள், உல்லன் பொருட்கள், செல்போன் கவர்கள், பூச்சாடிகள், கண்ணாடி ஓவியங்கள் போன்றவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். மேலும் புடவை வியாபாரம், மளிகை சாமான்கள் விற்பனை, பினாயில், சோப் ஆயில் தயாரித்தல் போன்ற தொழில்களிலும் ஈடுபட்டு வருவாய் பெற்று வருகின்றனர்.

வங்கியில் பெற்ற பொருளாதாரக் கடன் தொகையை மூலதன மாகக் கொண்டு மென் பொம்மைகள், கிரிஸ்டல் கற்கள், நவநாகரீக பரிசு பொருட்கள், உல்லன் பொருட்கள், செல்போன் கவர்கள், பூச்சாடிகள், கண்ணாடி ஓவியங்கள் போன்றவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் அனைத்தும் தரமாகவும், விலை குறைவாகவும் உள்ளதால் அனைவரும் விரும்பி வாங்குகின்றனர். மாவட்ட மற்றும் மாநில அளவில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளிலும், வணிக வளாகங்களிலும் இக்குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும் இக்குழுவின் உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயல்படுவதால் இப்பகுதியில் சிறப்பாக செயல்படும் குழு என்ற பெயரினைப் பெற்றுள்ளது. குழுவின் பொருளாதார வளர்ச்சிக்கு மட்டும் செயல்படாமல், பொதுச் சேவைகளிலும் இக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். பெண்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் செயல் களில் ஈடுபடுவது, சுற்றுப்புறச் சுகாதாரத்திற்குப் பாடுபடுவது, ஆதரவற்றோர் மற்றும் முதியோர்களுக்கு உதவுவது என இக்குழுவினர் தங்களின் செயல்பாடுகளினால் நாளும் வளர்ந்து வருகின்றனர். ■

ஒளிவிளக்கு மகளிர் சுய உதவிக் குழு

பெருமைகள் பலவும் பெற்றது பெரம்பலூர் மாவட்டம். இம்மாவட்டத்தில் வேப்பந்தட்டை எறையூர் கிராமம் சிலோன் காலனியில் ஒளிவிளக்கு மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் மகளிர் திட்டம் மூலம் பல்வேறு பயிற்சிகளை பெற்று, சுய தொழிலாக அழகிய மணி மாலைகள் தயாரிக்கும் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

ஸ்படிகம், நவரத்தினம், பவளம், ருத்ராட்சம், துளசி, முத்து, கருகமணி, கல்பவளம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட வண்ண மாலைகள், பஞ்சலோகம் சாலிக்கிராமத்தால் செய்யப்பட்ட மோதிரம், காப்பு போன்ற ஆபரணங்களை உற்பத்தி செய்கின்றனர். பிற சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கும் பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகின்றனர்.

இவர்கள் தயாரிக்கும் பொருட்கள் அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. பிற மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் விற்பனை அரங்குகள் அமைத்தும் தங்களின் பொருட்களை விற்பனை செய்கின்றனர். தங்களின் குழுவின் வெற்றிக்காகவும், வளர்ச்சிக்காகவும் சிறப்பாக செயல்பட்டு வரும் இக்குழுவின் உறுப்பினர்கள், பொருளாதார சுய சார்பு பெற்று தங்களின் ஏழ்மை நிலையில் இருந்து மீண்டு வந்துள்ளனர்.

தங்களின் பகுதியில் நலிவுற்றோருக்கும், முதியோருக்கும் உதவுவது, பள்ளிக் குழந்தைகளுக்கு பாடப் பொருட்கள் வாங்கி தருதல், கர்ப்பிணிகளுக்கு மருத்துவ உதவிகளை செய்தல் என பொது நல நோக்கிலும் செயல்பட்டு வருகின்றனர். 30க்கும் மேற்பட்ட பாராட்டுச் சான்றிதழ்களை இக்குழுவினர் பெற்றுள்ளனர் என்பதே இவர்கள் பெற்றுள்ள வெற்றிக்கு சான்றாகும். ■

ஸ்படிகம், நவரத்தினம், பவளம், ருத்ராட்சம், துளசி, முத்து, கருகமணி மற்றும் கல்பவளம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட வண்ண மாலைகள், பஞ்சலோகம் மற்றும் சாலிக்கிராமக் கல்லினால் செய்யப்பட்ட மோதிரம், காப்பு போன்ற பல்வேறு ஆபரணங்களை உற்பத்தி செய்கின்றனர். மிகச் சிறந்த பொருட்களை தேர்ந்தெடுத்து நேர்த்தி யாகவும், தரமாகவும், வண்ணமயமாகவும் தயாரிக்கப்படும் இப்பொருட்களுக்கு மக்களிடையே மிகுந்த வரவேற்பு உள்ளது.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழக முதலமைச்சராக பதவியேற்றார்கள்.

தமிழ்நாட்டில் சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற்ற செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 16.05.2011 அன்று தமிழக முதலமைச்சராக பதவி ஏற்றுக் கொண்டார். அத்துடன் 2 பெண்கள் உட்பட 33 அமைச்சர்களும் பதவி ஏற்றுக் கொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அமைந்துள்ள அரசில் பல்வேறு துறைகளின் அமைச்சர்களாக பொறுப்பேற்றுக் கொண்ட அமைச்சர் பெருமக்களின் விபரம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பொது, இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்து இந்தியப் பணிகள், உள்துறை, காவல் துறை	
திரு. ஓ. பன்னீர் செல்வம் மாண்புமிகு நிதித்துறை அமைச்சர்	நிதி, திட்டம், சட்டமன்றம், தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டு
திரு. கே. ஏ. செங்கோட்டையன் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்	வேளாண்மை, வேளாண்மை பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவு சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு
திரு. நத்தம் ஆர். விஸ்வநாதன் மின்சாரத்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர்	மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் மொலாசஸ்
திரு. கே. பி. முனுசாமி நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்	நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரக கடன்கள், நகர்பகுதி மற்றும் ஊரக குடிநீர் வழங்கல்
திரு. சி. சண்முகவேலு தொழில் துறை அமைச்சர்	தொழில்கள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

திரு. ஆர். வைத்திலிங்கம் வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதித் துறை அமைச்சர்	வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப் பகுதி வளர்ச்சி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்
திரு. அக்ரி எஸ். கிருஷ்ணமூர்த்தி உணவுத் துறை அமைச்சர்	உணவு. நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைவாசி கட்டுப்பாடு
திரு. சி. கருப்பசாமி கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்	கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி
திரு. பி. பழனியப்பன் உயர் கல்வித் துறை அமைச்சர்	தொழிற்கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல், தொழில்நுட்பவியல்
திரு. சி. வே. சண்முகம் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்	பள்ளிக் கல்வி, தொல்பொருளியல்
திரு. செல்லூர் கே. ராஜு கூட்டுறவுத் துறை அமைச்சர்	கூட்டுறவு, புள்ளி இயல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்
திரு. கே. டி. பச்சமால் வனத் துறை அமைச்சர்	வனம் மற்றும் சின்கோனா
திரு. எடப்பாடி கே. பழனிசுவாமி நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்	நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்
திரு. எஸ். பி. சண்முகநாதன் அறநிலையத் துறை அமைச்சர்	இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள், தமிழ் ஆட்சி மொழி, தமிழ் பண்பாடு
திரு. கே. வி. ராமலிங்கம் பொதுப்பணித் துறை அமைச்சர்	பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள்
திரு. எஸ். பி. வேலுமணி சிறப்புப் பணிகள் செயலாக்கத் துறை அமைச்சர்	சிறப்புப் பணிகள் செயலாக்கம்
திரு. டி. கே. எம். சின்னையா பிற்பட்டோர் நலம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்	பிற்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன், சீர்மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுபாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு)

திரு. எம். சி. சம்பத் ஊரகத் தொழில் துறை அமைச்சர்	ஊரகத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் உட்பட, சிறு தொழில்கள்
திரு. பி. தங்கமணி வருவாய் துறை அமைச்சர்	வருவாய், வருவாய் நிர்வாகம், மாவட்ட வருவாய் நிர்வாகம், துணை ஆட்சியாளர்கள், எடைகள்–அளவைகள் குறித்த சட்டம், நிறுமப் பதிவு–கம்பெனிகள் பதிவு–கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதிகள் குறித்த சட்டம்
திரு. ஜி. செந்தமிழன் செய்தி துறை அமைச்சர்	செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுது பொருள் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம்
திருமதி. எஸ். கோகுல இந்திரா வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர்	வணிக வரிகள் மற்றும் பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம்
திருமதி. செல்வி ராமஜெயம் சமூக நலத் துறை அமைச்சர்	மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், சத்துணவு, அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் காப்பு இல்லம், மாற்றுத் திறனாளிகள் நலன்
திரு. பி. வி. ரமணா கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்	கைத்தறி மற்றும் துணித்தொழில், கதர் வாரியம், பூதானம் மற்றும் கிராம தானம்
திரு. ஆர். பி. உதயகுமார் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்	தகவல் தொழில் நுட்பம்
திரு. என். சுப்பிரமணியன் ஆதிதிராவிடர் மற்றும் பலங்குடியினர் நலத் துறை அமைச்சர்	ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

திரு. வி. செந்தில் பாலாஜி போக்குவரத்துத் துறை அமைச்சர்	போக்குவரத்து, நாட்டுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திச் சட்டம்
திரு. கே. ஏ. ஜெயபால் மீன்வளத் துறை அமைச்சர்	மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்
திரு. இ. சுப்பையா, சட்டம் மற்றும் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்	சட்டம் மற்றும் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம், லஞ்ச ஒழிப்பு
திரு. புத்தி சந்திரன் சுற்றுலாத் துறை அமைச்சர்	சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
திரு. எஸ். டி. செல்லபாண்டியன் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்	தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகுக் கட்டுப்பாடு மற்றும் பத்திரிக்கை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலை வாய்ப்புத் திட்டங்கள்
டாக்டர் வி. எஸ். விஜய் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர்	மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்
திரு. என். ஆர். சிவபதி விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்	விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்

தமிழக முதலமைச்சராக பதவி ஏற்றுக் கொண்ட மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமது முதற்பணியாக, தமது கட்சி சார்பில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் முக்கியத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து அதற்குரிய கோப்புகளில் கையெழுத்திட்டதுடன், அரசின் சிறப்புத் திட்டங்களை செம்மையோடு, விரைந்து செயல்படுத்தவும் 'சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை' எனும் பெயரில் புதிய துறை ஒன்றை தொடங்கவும் உத்தரவு பிறப்பித்து கையொப்பம் இட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்து முதல் கையொப்பமிட்ட திட்டங்கள் வருமாறு

1) படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண நிதியுதவியாக தற்போது வழங்கப்பட்டு வரும் 25,000 ரூபாய் நிதியுதவியோடு, மாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம் இலவசமாக வழங்கப்படும்.

2) இளநிலைப் பட்டம் அல்லது டிப்ளமோ பட்டயம் பெற்ற பெண்களுக்கு திருமண உதவித் தொகை 25,000 ரூபாயில் இருந்து 50,000 ரூபாயாக உயர்த்துவதுடன், மாங்கல்யம் செய்ய 4 கிராம் தங்கம் இலவசமாக வழங்கப்படும்.

3) முதியோர், மாற்றுத் திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் கைம் பெண்களுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை 500 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

4) பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி பெறத் தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும். மேலும் அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 35 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும்.

5) தமிழகத்தின் கடலோர மீன் வளத்தைப் பாதுகாக்க வேண்டி ஒவ்வோர் ஆண்டும் 45 நாட்கள் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்படும் காலகட்டத்தில் பாதிக்கப்படும் மீனவக் குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்படும் 1000 ரூபாய் உதவித் தொகை 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

6) அரசுப் பணி புரியும் தாய்மார்கள் தங்களது பச்சிளம் குழந்தைகளைப் பேணிப் பாதுகாக்க மகப்பேறு கால சலுகையாக 6 மாத காலம் மகப்பேறு விடுப்பு அளிக்க ஒப்புதல் அளித்து அதற்குரிய கோப்பில் மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கையொப்பமிட்டார்கள்.

7) தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றவும், அதற்கான திட்டங்களை வகுத்து சிறப்புடன் அமல்படுத்தவும், அரசின் சிறப்புத் திட்டங்களை செம்மையோடு விரைந்து செயல்படுத்தவும் புதிய துறை ஒன்றைத் தொடங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டு, அதற்குரிய கோப்பில் கையொப்பமிட்டார்கள். இத்துறை 'சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை' எனும் பெயரில் அழைக்கப்படும். இத்துறைக்கென தனி அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ■

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இலவச அரிசி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மக்களுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் விரைவாகவும், செம்மை யாகவும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், பதவியேற்ற அன்றே ஏழு முக்கிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து அதற்குரிய கோப்புகளில் கையெழுத்திட்டார்கள். பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி பெறத் தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கவும், அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 35 கிலோ அரிசியை இலவசமாக வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16.05.2011 அன்று ஆணை பிறப்பித்தார்கள்.

ஏழை, எளிய, நலிந்த மற்றும் நடுத்தர மக்கள் உணவின்றி எக்காலத்திலும் வாடக் கூடாது என்ற கொள்கையிலும், தமிழக மக்களுக்கு என்றும் உணவு பாதுகாப்புகிடைக்கப்பெறவேண்டும்என்றகுறிக்கோளிலும் உறுதியாக உள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தபடி, குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெறும் வகையில் இலவச அரிசி வழங்கும் திட்டத்தை 01.06.2011 அன்று சென்னை, ஆழ்வார்பேட்டை, ஸ்ரீராம் காலனி டி.யு,சி.எஸ். நியாய விலைக் கடையில் பயனாளிகளுக்கு அரிசி வழங்கி தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நியாய விலைக் கடையில் அரிசி பெறத் தகுதி வாய்ந்த ஏழை, எளிய, நடுத்தர குடும்பங்கள் அனைத்தும் பயனடையும் வகையில், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, இத்திட்டத்தின் கீழ் 20 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. இதன்படி, தமிழ்நாட்டிலுள்ள 32 ஆயிரத்து 571 நியாய விலைக் கடைகளில் அரிசி பெற்று வரும் ஒரு கோடியே 65 இலட்சத்து 91 ஆயிரத்து 482 குடும்ப அட்டைதாரர்களும், ஒவ்வொரு மாதமும் அவர்களுக்குரிய அரிசி முழுவதையும் இத்திட்டத்தின் மூலம் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, குடும்ப அட்டைதாரர்களின் விருப்பத் திற்கேற்ப அவர்களுக்குரிய அரிசியை, பச்சரிசியாகவோ அல்லது புழுங்கல் அரிசியாகவோ வழங்கப்படும். மேலும், 18 இலட்சத்து 62 ஆயிரத்து 268 அந்தியோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 35 கிலோ அரிசியும், 01.06.2011 முதல் இலவசமாகவே வழங்கப்படும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்துள்ள இத்திட்டத்தால், தமிழ்நாட்டில் உள்ள அரிசி பெற தகுதி வாய்ந்த ஒரு கோடியே 84 இலட்சத்து 53 ஆயிரத்து 750 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைவார்கள். ■

சேலம் மாவட்டம்

இளைஞர்கள் வாழ்வில் மலர்ச்சி ஏற்படுத்தும் தொழிற்திறன் பயிற்சி

ஏழை எளிய மற்றும் நலிவுற்ற பிரிவு மக்களின் வாழ்வில் வளம் சேர்த்து, அவர்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் பெற்றிடும் வண்ணம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலுடன் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

இதன் ஒருபகுதியாக வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ற தொழிற் பயிற்சிகள் அளித்து அவர்களுக்கு வேலை வாய்ப்பும் பெற்றுத் தரப்படுகின்றன.

சேலம் மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகு மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு நேர்காணல் நடத்தப்பட்டு அவர்களுக்கு பல்வேறு துறைகளில் தொழிற்திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஏழை எளிய மற்றும் நலிவுற்ற குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களிடம் தொழிற்பயிற்சியில் சேருவதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, நேர் காணல் நடத்தப்பட்டு, அதில் இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்பு குறித்த பயிற்சிகள் பெற விருப்பம் உள்ள இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு சங்ககிரி பாலாஜி ஐ. டி. ஐ. நிறுவனத்தில் சுமார் மூன்று மாத காலங்கள் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்பு குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டது. சிறப்பாக பயிற்சியினை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழும் வழங்கப்பட்டது.

நான்கு சக்கர வாகனங்கள் குறித்த பயிற்சியினைப் பெற்ற எடப்பாடியைச் சேர்ந்த நந்தகோபால், பிரண்ட்ஸ் ஆட்டோ ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தில்பணியில்சேர்ந்துமாதஊதியமாக ரூபாய் 6000/– பெற்று வருகிறார். அதேபோல் இரண்டு சக்கர வாகனங்கள் குறித்த பயிற்சியினைப் பெற்ற மகுடஞ்சாவடி வெங்கடேஷ் மற்றும் தேவூரைச் சேர்ந்த பிரதாப் ஆகிய இருவரும் வீனஸ் ஆட்டோ ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தில் பணியில் சேர்ந்துள்ளனர். இவர்களுக்கு மாத ஊதியமாக ரூ. 6000/– கிடைக்கிறது.

தங்களின் வாழ்வில் ஒளியேற்றி, தங்களின் எதிர்காலத்திற்கு வழிகாட்டிய தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கும், சேலம் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் மற்றும் உதவித் திட்ட அலுவர்களுக்கும் தங்களின் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர் வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்கள். ■

சேலம் மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகு மூலம் இளைஞர் தொழிற்திறன் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சங்ககிரி பாலாஜி ஐ.டி.ஐ.யில் இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்பு பயிற்சி பெற்று வேலைவாய்ப்பும் பெற்ற இளைஞர்கள் சிலர்

பி. நந்தகோபால், த/பெ. புத்தர் பெருமாள்
எடப்பாடி. சேலம் மாவட்டம்

பி. வெங்கடேஷ், த/பெ. பெருமாள்
மகுடஞ்சாவடி. சேலம் மாவட்டம்

பி. பிரதாப், த/பெ. பழனிசாமி
தேவூர். சேலம் மாவட்டம்

உணவகம் நடத்தும் பாரதி மகளிர் குழுவினர்

தங்களுக்கு கிடைக்கும் சிறிய தொகையினையும் சிக்கனமாக செலவு செய்து, மீதத் தொகையினை குழுவின் பெயரில் தொடங்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் சேமித்து வந்தனர். தங்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு வெளிநபர்களிடம் அதிக வட்டிக்கு கடன் பெற்று மிகவும் துன்பப்பட்டு வந்தனர். பின்னர் குழுவிற்கு கிடைத்த சுழல் நிதித் தொகையினை குழு உறுப்பினர்கள் உள்கடனாகப் பெற்றனர். இதனால் வெளிநபர்களிடம் கடன் பெறும் நிலையிலிருந்து மீண்டனர்.

மதுரை மாவட்டம், மேலமடை பஞ்சாயத்து, தாசில்தார் நகர், செந்தில்நாதன் தெருவில் செயல்பட்டு வருவது பாரதி மகளிர் சுய உதவிக்குழு. கடந்த 2001ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்த பெண்களாவர்.

இக்குழுவின் சிறப்பான செயல்பாட்டின் காரணமாக மதுரை மாவட்ட ஆட்சியர் அலுலகத்தில் ஆவின் பாலகம் மற்றும் உணவகம் நடத்தும் வாய்ப்பு கிடைத்தது. 2003ஆம் ஆண்டு மதுரை மாவட்ட ஆட்சியர், ஆவின் பொது மேலாளர் மற்றும் மகளிர் திட்ட அலுவலர் ஆகியோரின் தலைமையில் பாரதி மகளிர் சுய உதவிக் குழுவின் ஆவின் பாலகம் மற்றும் உணவகம் திறந்து வைக்கப்பட்டது.

இதில் ஆவின் பொருட்கள், பால், டீ, காபி, பலகாரங்கள், கலவை சாதங்கள் போன்ற பொருட்கள் தரமாகவும் விலை குறைவாகவும் விற்பனை செய்யப் படுகிறது. ஆட்சியர் அலுவலக அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு அவர்களுடைய இருக்கைக்கே சென்று உணவு வகைகளை வழங்கி வருகின்றனர். ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் கூட்டங்களுக்கும் காபி, டீ, பிஸ்கட், வடை போன்ற உணவுப் பொருட்களை வழங்குகின்றனர். வெளியிடங்களில் இருந்து கிடைக்கும் மொத்த விற்பனை ஆணைகளிற்கு ஏற்பவும் உணவுப் பொருட்களை விற்பனை செய்கின்றனர்.

இதன் மூலம் கிடைக்கும் வருவாயில் வங்கிக் கடன் செலுத்தியது போக மாதம் ரூ. 4000/- வரை ஒவ்வொரு உறுப்பினரும் பெற்று வருகின்றனர். குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையுடனும் உற்சாகத்துடனும் செயல்பட்டு வருவதால் குழுவின் செயல்பாடுகள் மற்றவர்கள் பாராட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளது.

ஹாலந்து நாட்டு பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மாணவியான பெஃபியான என்பவர், தனது ஆய்வுக் கட்டுரைக்காக, இக்குழுவின் உணவகத்தில் 15 தினங்கள் ஆய்வு மேற்கொண்டு தனது ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்துள்ளார் என்பது இக்குழுவின் சிறப்பான செயல்பாட்டிற்கு ஒரு முத்திரையாகும்.

குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பல்வேறு பொது நலப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். மருத்துவ முகாம்கள், கிராம சபை ஆகியவற்றில் பங்கேற்றல், தங்கள் பகுதியில் மேலும் பல சுய உதவிக் குழுக்களை அமைக்க உதவுதல், இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படுபவர்களுக்கு உதவுதல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்றனர். ■

> “பெண் கல்வியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் பெண் குழந்தைகளைப் படிக்க வைத்து வருகின்றனர்.”

புதுக்கோட்டை மாவட்டம்

பேக்கரி தொழிலால் வெற்றி பெற்ற மகளிர் சுய உதவிக் குழுவினர்

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஒன்றியம், கே. பள்ளிவாசல் ஊராட்சியில் விண்மீன் மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்களான ஜன்னத்பேகம் மற்றும் மொகமத் பேகம் ஆகியோருக்கு பேக்கரி தொழிலில் முன் அனுபவம் உள்ளதால், குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் பேக்கரி தொழில் குறித்த பயிற்சியினை வழங்கி, பேக்கரி பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யலாம் என தீர்மானித்தனர்.

சுழல் நிதியாகப் பெற்ற 60 ஆயிரம் ரூபாயினை மூலதனமாகக் கொண்டு, கேக், பிஸ்கட், பன், ரஸ்க் மற்றும் இதர கார இனிப்பு வகை உணவுப் பொருட்களை தரமாகவும், சுவையாகவும் தயாரித்து விற்பனை செய்ய ஆரம்பித்தனர். இவர்கள் தயாரிக்கும் பொருட்கள் தர மாகவும், விலை குறைவாகவும் இருந்ததால் அதிக அளவில் விற்பனையாகத் தொடங்கியது.

தொழிலை மேலும் விரிவாக்கத் திட்டமிட்டு, இதற்குத் தேவைப்படும் மூலதனத்திற்கு மகளிர் திட்டத்தி ன் மூலம் SGSY திட்டத்தின் கீழ் பொருளாதார மானியக் கடனுதவியாக ரூ.1.25 இலட்சம் மற்றும் ரூ.3.72 இலட்சம் வங்கிக் கடனாகப் பெற்று, மொத்தம் ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் தொழிலை விரிவுபடுத்தி உள்ளனர். மேற்படி தொழில் தொடர்பான திறன் வளர்ப்புப் பயிற்சிகளையும் மகளிர் திட்டம் மூலம் பெற்றுள்ளனர்.

தங்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு 'புதுகை' எனப் பெயரிட்டு, அனைவரும் விரும்பும் வகையில் அழகிய முறையில் பேக் செய்து விற்பனை செய்து வருகின்றனர். இவர்களின் உற்பத்திப் பொருட்களை உள்ளூர் வியாபாரிகள் மொத்தமாக வாங்கிக் கொள்கின்றனர். மேலும் பூமாலை வணிக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கடையிலும் விற்பனை செய்கின்றனர்.

இதன் மூலம் கிடைக்கும் வருவாயில் வங்கிக் கடன் தவணை செலுத்தியது போக ஒவ்வொரு உறுப்பினரும் நாள் ஒன்றிற்கு ரூ. 80/– வீதம் மாதம் ஒன்றிற்கு ஊதியமாக ரூ. 2400/– பெறுகின்றனர். மீதமுள்ள தொகையினை குழுவின் வங்கிக் கணக்கில் சேமித்து வருகின்றனர்.

மேற்படி குழுவினர் தங்களின் அடுத்தகட்ட நடவடிக்கையாக புதுக்கோட்டை மாவட்டத்தில் மறுசீரமைக்கப்பட்டுள்ள அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் விபரங்களையும் சேகரித்து, அதில் உள்ள உறுப்பினர் குழுக்களுக்கு தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து தங்களின் விற்பனை இலக்கை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளனர். பிற குழுக்களின் உறுப்பினர்களுக்கும் பேக்கரி தொழில் குறித்த பயிற்சியினை அளிக்கின்றனர். ■

இக்குழுவின் செயல்பாட்டினை அறிந்து இதர மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுவினர் களப்பணி மேற்கொண்டு பார்வையிட்டு ஆலோசனைகளைப் பெற்றுச் செல்கின்றனர். விண்மீன் மகளிர் சுய உதவிக் குழு திருமயம் வட்டாரத்தில் உள்ள மற்ற சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுதாரணமாக செயல்பட்டு வருகின்றனது என்பது குறிப்பிடத்தக்கது.

திண்டுக்கல் மாவட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனைக் கண்காட்சி

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் நடைபெற்ற மலர்க் கண்காட்சியில் திண்டுக்கல் மாவட்ட மகளிர் திட்டம், பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனை கண்காட்சி நடைபெற்றது. இக்கண்காட்சியில் திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து 19 குழுக்களும், தூத்துக்குடி, இராமநாதபுரம், தேனி, மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் இருந்து 11 குழுக்களும் கலந்து கொண்டு விற்பனை அரங்குகளை அமைத்திருந்தனர். இக் கண்காட்சியில் சுமார் ரூ. 13,75,050/– அளவிற்கு மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை ஆகி உள்ளது. ■

இவ்விற்பனைக் கண்காட்சியின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் “மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் இக்கண்காட்சி ஒரு வெற்றிப் படிக்கட்டாக அமைந்தது” என்று குறிப்பிட்டார்.

திருப்பூர் மாவட்டம்

படகு சவாரி

திருப்பூர் மாவட்ட மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் ஆண்டிப்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட சின்னாண்டிபாளையம் கிராமத்தில் புளூட்டோ மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. பிரதிநிதி மற்றும் ஊக்குநர் பயிற்சிகளும் மற்றும் பல்வேறு தொழிற்பயிற்சிகளும் மகளிர் திட்டத்தின் மூலம் பெற்றுள்ள இக்குழுவின் உறுப்பினர்கள், ஒற்றுமையுடன் செயல்பட்டு தங்கள் குழுவினை மிகச் சிறப்புடன் நடத்தி வருகின்றனர்.

தர மதிப்பீடு செய்யப்பட்டு, சுழல் நிதியினைக் பெற்ற இக்குழுவினர் அத்தொகையைக் கொண்டு தங்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர். வங்கியில் பெற்றக் கடனையும் தவணை தவறாமல் திரும்பச் செலுத்தி விட்டனர்.

ஆண்டிப்பாளையத்தில் உள்ள குளத்தில் சுற்றுலாப் பயணிகள் படகு சவாரி செய்வதற்கு ஏதுவாக படகுகள் வாங்கி சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகைக்கு விடும் தொழிலை மேற்கொண்டிட திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் புளூட்டோ மகளிர் சுய உதவிக் குழுவினர் அனுமதி பெற்றனர்.

வங்கியில் பொருளாதாரக் கடனாக ரூபாய் 5 இலட்சம் பெற்று, அத்தொகையைக் கொண்டு படகுகள் வாங்கி ஆண்டிப்பாளையம் குளத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு படகுகளை வாடகைக்கு விடும் தொழிலை மேற்கொண்டு வருவாய் ஈட்டி வருகின்றனர்.

வங்கிக் கடனை முறையாகத் திரும்பச் செலுத்தி வருவதுடன் குழுவின் உறுப்பினர்களும் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர். இதற்குக் காரணமான மகளிர் திட்டத்திற்கு தங்களின் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றனர் புளூட்டோ சுய உதவிக் குழுவினர். ■

வேலூர் மாவட்டம்

பேன்சி ஸ்டோர் நடத்தும் நரிக்குறவர் மகளிர் குழு

நரிக்குறவர் என்றாலே காடை, கவுதாரி, கொக்கு போன்றவற்றை சுட்டு தின்பதும், ஊர் ஊராகச் சென்று திருவிழா, திருமண மண்டபங்களில் பிச்சை எடுப்பவர்கள் என்று நினைத்தது ஒரு காலம். அது எல்லாம் இப்போது மலையேறி விட்டது. உழைத்து தான் பிழைப்பு நடத்துவோம் என கங்கணம் கட்டிக் கொண்டு வியாபாரம் செய்ய முன் வந்துள்ளனர். இதோ நரிக்குறவர்களின் வித்தியாசமாக நடைமுறை வாழ்க்கை.

வேலூர் மாவட்டம், குடியாத்தத்தை அடுத்துள்ளது பாக்கம் கிராமம். இங்கு அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பு வீடுகளில் 52 நரிக்குறவர் குடும்பங்கள் வசித்து வருகின்றன. ஒரு காலத்தில் நிரந்தர வசிப்பிடம் இல்லாமல் ஊர் ஊராக அலைந்து திரிந்து வாழ்ந்து வந்தவர்கள் தற்போது பாக்கம் கிராமத்தில் நிரந்தரமாக வசிக்கத் தொடங்கி விட்டனர். பழக்க வழக்கங்களையும் காலத்திற்கு ஏற்றார் போல மாற்றிக் கொண்டுள்ளனர்.

தங்கள் குடியிருப்பு பகுதியில் மகளிர் திட்டத்தின் உதவியுடன் மலர்கள், சந்தோஷம், ரோஜாக் கூட்டம் என்ற பெயர்களில் 3 சுய உதவிக் குழுக்கள் அமைத்து செயல்பட்டு வருகின்றனர். ஒவ்வொரு குழுவிற்கும் ஆதார நிதியாக தலா ரூபாய் 10 ஆயிரம், சுழல் நிதியாக ரூபாய் 40 ஆயிரம் மற்றும் நேரடிக் கடனாக ரூபாய் 60 ஆயிரமும் பெற்றுத் தரப்பட்டுள்ளது. மேலும் வாழ்வாதார துணைக்குழு மூலம் தொழில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு உதவியாக ரூபாய் 10 ஆயிரம் வீதம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன் தொகையினைக் கொண்டு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் இவர்கள் ரூபாய் 500/–க்கு பொருட்களை விற்பனை செய்தால் ரூபாய் 250/– வரை இலாபம் பெற்று வருகின்றனர். இக்குழுக்களில் மொத்தம் 57 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த 3 குழுக்களும் ஒன்று சேர்ந்து, கடை ஒன்றினை வாடகைக்கு எடுத்து அதில் ஊசி, மணி போன்ற பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர். அந்தக் கடைக்கு 'சிவதி பேன்சி ஸ்டோர்' என்று பெயரிட்டுள்ளனர்.

இக்கடையில் ஊசி, மணி, பாசி, பெண்களுக்குத் தேவையான அழகு சாதனப் பொருட்கள், குழந்தைகளுக்கான சின்ன சின்ன பிளாஸ்டிக் விளையாட்டுப் பொம்மைகள், சோப்பு, சீப்பு, கண்ணாடி என பலவிதமான பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது. இதற்காக குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஆண், பெண் என 11 நபர்கள் செயற்குழு உறுப்பினர்களாக உள்ளனர்.

மாதம் ஒருமுறை கூட்டம் நடத்தப்படுகிறது. இதில் தேர்வு செய்யப்படும் நபர்கள் சென்னை அல்லது வேலூர் சென்று தேவையான பொருட்களை கொள்முதல் செய்து வருகிறார்கள். அழகி என்பவர் கடையில் வியாபாரம் செய்யும் பணியினை மேற் கொண்டு வருகிறார்.

முன்பெல்லாம் வட்டிக்கு கடன் வாங்கிக் கொண்டு நிலையான இருப்பிடம் இன்றி சுற்றித் திரிந்து கொண்டிருந்ததால் இவர்களின் குழந்தைகள் படிப்பறிவில்லாமல் இருந்தனர். ஆனால் இப்போது இவர்களின் குழந்தைகளும் படிக்கத் துவங்கி விட்டனர். வட்டிக்கு கடன் பெறும் நிலையும் இல்லாமல் போய் விட்டது. இன்று நரிக்குறவர்களின் பிள்ளைகள் 15 பேர் அங்குள்ள பள்ளியில் சேர்ந்து பயின்று வருகின்றனர். ■

தேவனாம்பட்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

திருவண்ணாமலை மாவட்ட மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வருவது தேவனாம்பட்டு ஊராட்சி அளவிலான மகளிர் குழு கூட்டமைப்பு.

2005ம் ஆண்டில் துவக்கப்பட்ட இந்தக் கூட்டமைப்பில் 24 சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்களாக உள்ளன. 2006ஆம் ஆண்டு 2500 ரூபாய் மானியத்துடன் கூடிய கச்சா வீட்டுக் கடனாக 117 நபர்களுக்குகூட்டமைப்பின்சார்பில்பெற்றுத்தரப்பட்டது. தையல் பயிற்சி, சமையல் பொடிகள் தயாரிப்பு, கணினிப் பயிற்சி போன்றவை கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் வழங்கப்பட்டது. மேலும் இக்கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ள குழுக்களுக்கு தொழில் தொடங்க வங்கிக் கடனும் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

சோடா கலர் மற்றும் ரஸ்னா தயாரித்தல், கறவை மாடுகள் வளர்த்தல், உணவு விடுதி நடத்துதல், பூந்தோட்டம் அமைத்தல், இருசக்கர வாகனங்கள் பழுது நீக்கும் கடை வைத்தல், மளிகைக் கடை நடத்துதல், நிலம் குத்தகைக்கு வாங்கி விவசாயம் மேற்கொள்ளல், கால்நடைக் கன்று வளர்த்தல், தின்பண்டங்கள் தயாரித்தல், அரிசி வியாபாரம், கூடை பின்னுதல், செங்கல் சூளை மற்றும் ஜவுளிக் கடை நடத்துதல் போன்ற தொழில்களில் கூட்டமைப்பின் உறுப்பினர் குழுக்கள் ஈடுபட்டு வருகின்றன. சுகாதாரத்தைப் பேணும் வகையில் தனிநபர் கழிப்பறை கட்ட ரூபாய் 2500/– மானியம் மற்றும் கடன் தொகை ரூபாய் 7000/– வீதம் 102 நபர்களுக்கு ரூபாய் 7,14,000/– கடன் பெற்றுத் தரப்பட்டது.

கூட்டமைப்பை மறுசீரமைக்க ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. காட்டுப்புத்தூர் மற்றும் தேவனாம்பட்டு ஆகிய பகுதிகளில் முறையே 7 மற்றும் 10 குழுக்களைக் கொண்டு குடியிருப்பு மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கூட்டுக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் உறுப்பினர்களுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. தீபம் குழுவைச் சேர்ந்த மனோஜா, செந்தூர் குழுவைச் சேர்ந்த வாசுதி மற்றும் வசந்தம் குழுவைச் சேர்ந்த ஜெயந்தி ஆகியோருக்கு இயற்கை மரண காப்பீடாக தலா ரூபாய் 30,000/– பெற்றுத் தரப்பட்டுள்ளது.

வாரந்தோறும் மருத்துவ முகாம் நடத்துதல், கிராமச் சுற்றுச்சூழலை பாதுகாத்தல், போலியோ சொட்டு மருந்து போடுதல், யானைக்கால் வியாதிக்கு மாத்திரை கொடுத்தல், தண்ணீர் தொட்டியினைச் சுத்தம் செய்தல், சுகாதார வளாகத்தை தூய்மை செய்தல், கிராம சபாக் கூட்டங்களில் பங்கு கொண்டு தங்கள் பகுதிக்கு தேவையான அடிப்படை வசதிகளைப் பெற்றுத் தருதல் ஆகிய சமூக நலப் பணிகளிலும் கூட்டமைப்பின் உறுப்பினர் குழுக்கள் ஈடுபட்டு வருகின்றன.

கூட்டமைப்பில் இணைந்துள்ள குழுக்களின் உறுப்பினர்கள் அனைவரும் தற்போது தங்களுக்குப் போது மான வருவாய் ஈட்டுகின்றனர். வறுமைக் கோட்டிற்கு கீழ் இருந்த உறுப்பினர்களின் சதவீதம் தற்போது வெகுவாகக் குறைந்துள்ளது. ■

“துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் செயல்படும் 47 பஞ்சாயத்துகளில் சிறந்த கூட்டமைப்பாக தேவானம்பட்டு மகளிர் குழுக் கூட்டமைப்பு தேர்வு செய்யப்பட்டுள்ளது.”

சுய உதவிக் குழுக்களின் பதிவேடுகளை பராமரிக்க...

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை கண்ணாடி போல் பிரதிபலிப்பவை அக்குழுக்களின் பதிவேடுகள். ஆனால் பல இடங்களில் பல குழுக்கள் இப்பதிவேடுகளை சரியாக பராமரிக்காதது வருந்தத் தக்கது. குழு தொடங்கி பல ஆண்டுகளாகியும் பதிவேடுகளை எப்படி பராமரிக்க வேண்டும் என்பதை கூட தெரியாமல் தொண்டு நிறுவன களப் பணியாளர்களை சார்ந்தே சில குழுக்கள் இருக்கின்றன.

எழுதப் படிக்கத் தெரியாத ஊக்குநர், பிரதிநிதிகள் கூட எழுதப் படிக்கத் தெரிந்த உறுப்பினர்களைக் கொண்டு முறையாகப் பராமரிக்க வேண்டும். அப்போது தான் குழு சுய சார்பு பெற்றதாகக் கருத முடியும். பதிவேடுகளைப் பராமரிக்க சில யோசனைகள்...

கூட்டம் முடிவுறும் முன்பு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை தீர்மானப் புத்தகத்தில் எழுதி அந்தக் கூட்டத்திற்கு தலைமை பொறுப்பு ஏற்று இருக்கும் உறுப்பினர் அல்லது படிக்கத் தெரிந்த உறுப்பினரை சத்தமாக வாசிக்கச் சொல்ல வேண்டும். வாசித்த பின்னர் அனைவரிடமும் கையொப்பம் பெற்று கூட்டத்தை நிறைவு செய்ய வேண்டும்.

1) குழு தீர்மானம் என்பது குழுவின் தலையெழுத்து போன்றது. எனவே வெற்றுத் தீர்மானப் புத்தகத்தில் கையெழுத்திடுவதையும், கையெழுத்து வாங்குவதையும் தவிர்க்க வேண்டும்.

2) கூட்டம் முடிவுறும் முன்பு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை தீர்மானப் புத்தகத்தில் எழுதி அந்தக் கூட்டத்திற்குத் தலைமை பொறுப்பு ஏற்று இருக்கும் உறுப்பினர் அல்லது படிக்கத் தெரிந்த உறுப்பினரை சத்தமாக வாசிக்கச் சொல்ல வேண்டும். வாசித்த பின்னர் அனைவரிடமும் கையொப்பம் பெற்று கூட்டத்தை நிறைவு செய்ய வேண்டும்.

3) குழுவின் ஒவ்வொரு பண பரிவர்த்தனையும் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு இருக்க வேண்டும்.

4) தீர்மானப் பதிவேடு, வங்கி பாஸ் புத்தகம், சேமிப்பு பேரேடு மூன்றும் குழுவின் ஒரே நிதி நிலையைக் காண்பிக்க வேண்டும்.

5) அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுதத் தெரியாத பட்சத்தில் குழு உறுப்பினர்களின் வீடுகளில் படித்துக் கொண்டிருக்கும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் / படித்தப் பெண்களைக் கொண்டு எழுத கூறலாம். அவர்களுக்கு குழு சேமிப்பில் இருந்து ஊக்கத் தொகை / சிறிய நினைவு பரிசுகள் வழங்கலாம்.

6) பதிவேடுகளை கிழியா வண்ணம் அட்டை போட்டு கசங்காமல் பத்திரமாகப் பராமரிக்க வேண்டும். இவ்வாறு முறையாகப் பதிவேடுகளை நாம் பராமரித்தால் தர மதிப்பீட்டில் அதிக மதிப்பெண்கள் பெற்று வெற்றியும் பெறலாம். ■

சென்னை மாவட்டம்

வீட்டு உபயோக கெமிக்கல் பொருட்கள் உற்பத்தி

சென்னை, அமைந்தகரை. 8/4, மெயின் தெருவில் காளிகாம்பாள் மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. திருமதி பத்மஸ்ரீ சரோஜினி வரதப்பன் மகளிர் சங்க தொண்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். குழுவாக இணைந்து வீட்டு உபயோக கெமிக்கல் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யலாம் என்று தீர் மானித்து சென்னை மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகினை அணுகினர்.

மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் இந்தியன் வங்கியில் பெற்ற பொருளாதாரக் கடனாகப் பெற்ற ரூ. 5 இலட்சத்தை மூலதனமாகக் கொண்டு கெமிக்கல் பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். ■

ஒற்றுமையுடனும் ஊக்கத்துடனும் செயல்பட்டு வரும் இக்குழுவின் உறுப்பினர்கள் தங்களின் உழைப்பால் இன்று சிறந்த சுய உதவிக் குழு என்ற பெயரினைப் பெற்றுள்ளனர்.

நீலகிரி மாவட்டம்

தேயிலைத் தோட்டம்

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பஞ்சாயத்தில் அமைந்துள்ள அழகிய கிராமம் மிலித்தேன். இக்கிராமத்தில் வசிக்கும் மக்களின் முக்கியத் தொழில் விவசாயம்தான். 1999ஆம் ஆண்டு இப்பகுதியில் முதன் முதலாக 15 பெண்களை உறுப்பினர்களாகக் கொண்ட அன்னை இந்திரா மகளிர் சுய உதவிக் குழு துவக்கப்பட்டது.

நெடுகுலா பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இக்குழு இணைந்துள்ளது. வங்கியில் பெற்ற 5 இலட்சம் ரூபாயினைக் கொண்டு 3 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தை குழுவிற்கு சொந்தமாக வாங்கியுள்ளனர். தோட்டத்தில் விளையும் தேயிலையினை பறித்து தங்கள் பகுதி யில் செயல்படும் தேயிலைத் தொழிற்சாலைக்கு விற்பனை செய்கின்றனர்.

தங்களது தோட்டத்தில் விளையும் தேயிலையில் சாதாரண ரக தேயிலை கிலோ ரூபாய் 11/– எனவும், சிறப்பு ரக தேயிலை ரூபாய் 17/– எனவும் விலை நிர்ணயித்து விற்பனை செய்கின்றனர். தங்கள் பகுதியில் விளையும் தேயிலையை தொழிற்சாலைகளுக்கு வாங்கிக் கொடுக்கும் முகவராகவும் செயல்பட்டுவருகின்றனர். 13 தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு முகவராக செயல்படும் இக்குழுவினர் தினசரி 400 முதல் 1000 கிலோ வரை தேயிலையை தொழிற்சாலைகளுக்கு பெற்றுத் தருகின்றனர்.

தங்களின் அயராத உழைப்பினால் நாளுக்கு நாள் முன்னேறி வரும் அன்னை இந்திரா மகளிர் சுய உதவிக் குழுவினர் தங்கள் பகுதியின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்துதல், மருத்துவ முகாம்களில் பங்கு கொள்ளல், பள்ளிக் குழந்தைகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்தல், ஆதரவற்றோர், முதியோர், மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை பெற்றுத் தருதல் போன்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். ■

கரூர் மாவட்டம்

தென்னை மரம் குத்தகை

கரூர் மாவட்டம், தாந்தோணி ஊராட்சி, பள்ள பாளையம் கிராமத்தில் லட்சுமி மகளிர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழு இரண்டு முறை நேரடிக் கடனும், ஒரு முறை சுழல் நிதியும் பெற்றுள்ளது. பொருளாதாரக் கடனாக ரூபாய் நான்கு இலட்சம் பெற்று, சுமார் 500க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ள மூன்று ஏக்கர் தென்னந்தோப்பை மூன்று வருடங்களுக்குக் குத்தகைக்கு எடுத்துள்ளனர்.

இதன் மூலம் தேங்காய் மற்றும் தென்னை மட்டைகளை விற்பனை செய்கின்றனர். பருவ காலங்களில் ஒரு தென்னை மரத்திற்கு சுமார் 200 காய்கள் வரை இருக்கும். வருடத்திற்கு நான்கு முறை தேங்காய்கள் வெட்டப்படுகின்றன.

கிடைக்கும் வருமானத்தில் மாதம் 7000 ரூபாய் வங்கிக் கடன் தவணையைத் திருப்பச் செலுத்தியது போக ஒவ்வொரு உறுப்பினருக்கும் மாதம் ரூபாய் 2500/– முதல் ரூபாய்3000/– வரை வருவாய் கிடைக்கிறது. மேலும் இக்குழுவின் உறுப்பினர்கள் தென்னந்தோப்பில் வேலை செய்யும் நேரம் போக மீதமுள்ள நாட்களில் வேறு வேலைகளிலும் ஈடுபட்டு வருவாய் பெற்று வருகின்றனர்.

மகளிர் சுய உதவிக் குழுவில் இணைந்ததால் தங்களின் வறுமை நீங்கியது என்று கூறும் இக்குழுவினர் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்ததால் தங்களது குழந்தைகளை நன்கு படிக்க வைக்க வேண்டும் என்ற உறுதியினை மேற் கொண்டு அதற்கேற்ப தங்கள் பிள்ளைகளை நன்கு படிக்க வைத்து வருகின்றனர். ■

நாகப்பட்டினம் மாவட்டம்

வாழ்வில் ஒளியேற்றிய திட்டம்

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை, தெத்தி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சுரேஷ் மற்றும் ரமேஷ். இவர்கள் இருவரும் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களின் பெற்றோர் தினக்கூலி வேலைக்குச் சென்று அதில் கிடைக்கும் குறைவான வருவாயினைக் கொண்டு தங்களின் குடும்பத்தை நடத்தி வந்தனர்.

இந்நிலையில் நாகப்பட்டினம் மாவட்ட மகளிர் திட்டம் மூலம் இளைஞர்களுக்கு ஊக்கத் தொகையுடன் கூடிய தொழிற்திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது என்ற செய்தியினை அறிந்து, சுரேஷ் மற்றும் ரமேஷ் இருவரும் தொழிற்திறன் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டனர். இருவரும் ஸ்பிரே பெயிண்டிங் தொழிற்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு யோகிதா நிறுவனத்தில் 52 நாட்கள் ஸ்பிரே பெயிண்டிங் பயிற்சி வழங்கப்பட்டு, பயிற்சிக்குப் பின்னர் பயிற்சிக்கான சான்றிதழ் மற்றும் ஊக்கத் தொகை ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

நாகப்பட்டினம் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி, யோகிதா நிறுவனத்தின் மூலம் தற்போது சுரேஷ் மற்றும் ரமேஷ் ஆகியோர் கரூர் சக்தி கோச் பஸ் பாடி நிறுவனத்தில் மாத ஊதியமாக ரூபாய் 3,500/– பெற்று பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் பணிபுரியும் நிறுவனத்திலேயே தங்குவதற்கான ஏற்பாட்டையும் மகளிர் திட்டமே செய்து தந்துள்ளது. தங்களைப் போல் சிரமப்படும் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளித்து, வேலைவாய்ப்பும் பெற்றுக் கொடுத்து, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வரும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கும், நாகப்பட்டினம் மாவட்ட மகளிர் திட்டத்திற்கும் சுரேஷ் மற்றும் ரமேஷ் தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். ■

திருநெல்வேலி மாவட்டம்

வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர், ராஜகோபாலபேரி கிராமத்தில் செயல்பட்டு வருவது ஸ்டார் மகளிர் சுய உதவிக் குழு. ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த 14 பெண்கள் இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர். துவக்கத்தில் வாரம் ரூ. 10/– வீதம் சேமித்தவர்கள் தற்போது மாதம் ரூ. 100/– வரை சேமித்து வருகின்றனர்.

சுழல் நிதியாகப் பெற்றத் தொகையைக் கொண்டு குழுவின் உறுப்பினர்கள் உள்கடன் பெற்றுக் கொள்கின்றனர். குழுவின் சார்பில் சுய தொழில் மேற்கொள்ளும் பொருட்டு பொருளாதாரக் கடனாக பெற்ற மூன்று இலட்சம் ரூபாயினை மூலதனமாகக் கொண்டு சமையல் பாத்திரங்கள் வாடகைக்கு விடும் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் மூலம் கிடைக்கும் வருவாயில் வங்கிக் கடனைத் தவணை தவறாமல் திரும்பச் செலுத்தி உள்ளனர். மீதமுள்ள தொகையினை மாதந்தோறும் குழு உறுப்பினர்கள் பிரித்துக் கொள்கின்றனர். மேலும் ரூபாய் இரண்டு இலட்சம் கடன் பெற்று, ஒலிபெருக்கிகள் வாடகைக்கு விட்டு வருவாய் பெற்று வருகின்றனர்.

வீடு கட்டுதல், விவசாயப் பணிகள் மேற்கொள்ளல், தனிநபர் தொழில் துவங்குதல் ஆகியவற்றிற்கு குழுவின் உறுப்பினர்கள் வங்கிக் கடன் மற்றும் உள்கடன்களை பயன்படுத்திக் கொள்கின்றனர். இத்தகைய செயல்பாடுகளினால் குழு உறுப்பினர்களின் பொருளாதார நிலையும், வாழ்க்கைத் தரமும் உயர்வடைந்து வருகிறது. ■

இவை தவிர்த்து பலவகையான சமூக சேவைகள் செய்ததாலும், வங்கியில் பெற்ற கடன் மற்றும் உள்கடன் ஆகியவற்றை முறையாகத் திரும்பச் செலுத்தியதாலும் இக்குழு மாவட்ட அளவில் சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டம்

ஒன்றிணைந்தனர் வெற்றி பெற்றனர்

அம்பிகை மகளிர் சுய உதவிக் குழு கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி (தெற்கு), சின்னாம்பாளையம் ஊராட்சியில் சிறப்பாக செயல்பட்டு வரும் குழுவாகும். சின்னாம்பாளையம்பஞ்சாயத்துஅளவிலானகூட்டமைப்புடன் இணைந்துள்ள இக்குழுவின் உறுப்பினர்கள் சுழல் நிதியாக ரூ. 60 ஆயிரம் பெற்று அதை தவணை தவறாமல் திரும்பச் செலுத்தினர். பின்னர் பொருளாதாரக் கடனாகப் பெற்ற 5 லட்சம் ரூபாயினை மூலதனமாகக் கொண்டு, டேபிள், சேர், சாமியானா மற்றும் சமையல் பாத்திரங்கள் போன்றவற்றை வாடகைக்கு விடும் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

குழுவின் உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டம் மூலம் சணல் பைகள், மென் பொம்மைகள், இளநீரில் இருந்து வினிகர் போன்றவற்றை தயாரிக்கும் பயிற்சிகளும், கணினி இயக்குதல் பயிற்சி, பயிற்றுநர் பயிற்சி, ஊரகக் கடன் மற்றும் குறுந்தொழில்கள் குறித்த பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் மூலம் அளிக்கப்பட்ட குந்தன் செட் நகை செய்யும் பயிற்சியில் இக்குழுவினைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பயிற்சிக்குப் பின்னர் குந்தன் நகை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். பல்வேறு இடங்களில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து குந்தன் நகைகளை விற்பனை செய்து வருகின்றனர். மேலும் இக்குழுவின் உறுப்பினர்கள் தையல், சமையல், வடகம், மசாலாப் பொடிகள் தயாரித்தல் என பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வருவாய் பெறுகின்றனர். இக்குழுவினரின் உற்பத்திப் பொருட்கள் தரமாகவும், விலை குறைவாகவும் இருப்பதால் அனைவரும் விரும்புகின்றனர்.

விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், பள்ளி மாணவ மாணவிகளுக்குத் தேவையானப் பொருட்களை வாங்கித் தருதல், ஆதரவற்றோர் இல்லங்களுக்கு சென்று உணவு மற்றும் துணிகள் வழங்குதல், கூட்டமைப்பின் மூலம் நடத்தப்படும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுதல், கண்தான முகாம், நுகர்வோர் மற்றும் சட்ட விழிப்புணர்ச்சி முகாம் ஆகியவற்றிலும் கலந்து கொள்கின்றனர். பல்வேறு மகளிர் குழுவின் உறுப்பினர்களுக்கு குந்தன் நகை செய்யும் பயிற்சியினையும் அளித்து வருகின்றனர்.

மிகக் குறைந்த வருவாயில் சிரமமான முறையில் வாழ்க்கை நடத்தி வந்தவர்கள் குழுவாய் ஒன்றிணைந்து இன்று சுய தொழில்கள் மேற்கொண்டு நல்ல வருவாயும், சமூகத்தில் நல்ல அந்தஸ்தும் பெற்று உள்ளனர். இதற்குக் காரணமான கோவை மாவட்ட மகளிர் திட்டத்திற்கும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கும் தங்களின் நன்றியினை கூறுகின்றனர் அம்பிகை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள். ■

இராமநாதபுரம் மாவட்டம்

பாரதி கண்ட புதுமைப் பெண்கள்

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், என்மனங்கொண்டான் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கீழ் பாரதி மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ள பெண்கள் அனைவரும் ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு மகளிர் திட்டத்தின் மூலம் சுழல் நிதியாக ரூபாய் 60,000/- வழங்கப்பட்டது.

இக்குழுவின் செயல்பாடுகள் மிகவும் சிறப்பாக இருந்ததால் குழுவின் உறுப்பினர்களுக்கு மகளிர் திட்டம் வாயிலாக பல்வேறு தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டது. பின்னர் மானியத்துடன் கூடிய பொருளாதாரக்கடனாக 2,25,000 ரூபாயினைப் பெற்ற இக்குழுவினர், தங்கள் கிராமத்தில் அமைந்துள்ள பூமாலை வணிக வளாகத்தில் கடையினை வாடகைக்கு எடுத்து, அதில் தையல் கடை வைத்துள்ளனர். இதன் மூலம் அப்பகுதியில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான ஆடைகளை சிறப்பாக தைத்து வழங்குகின்றனர்.

தையல் தொழிலை மேற்கொண்டு வருவதன் மூலம் இக்குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு ரூபாய் 200/- வரை வருவாய் பெறு கின்றனர். வங்கியில் பெற்றக் கடனையும் முழுமை யாகத் திரும்பச் செலுத்தியுள்ளனர்.

பாரதி கண்ட புதுமைப் பெண்களாக உழைப்பினால் தங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி வரும் பாரதி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் சிறப்பான செயல்பாட்டினால் அனைத்து தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்று வருகின்றனர். ■

கிருஷ்ணகிரி மாவட்டம்

உழைப்பும் உயர்வும்

மகளிருக்குத் தேவை வளர்ச்சி என்னும் சொல்லுக்கு ஏற்ப கருக்கனஹள்ளி பஞ்சாயத்து பழையூரில் முதன் முதலில் 2003ஆம் ஆண்டு துவக்கப்பட்டது நித்யா மகளிர் சங்கம். இந்த சங்கத்தின் உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயல்பட்டு இன்று பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற்றுள்ளனர்.

சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன் பெறுதல், சமூகப் பணிகள் மேற்கொள்ளல், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், மகளிருக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல், மகளிருக்கு பயிற்சிகள் அளித்தல் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

இந்தியன் வங்கி அளித்த தொழிற்கடன் தொகை ரூ. 3 இலட்சத்தைக் மூதலீடாகக் கொண்டு புளி மண்டி வைத்தல், கறவை மாடுகள் வாங்கி வளர்த்தல் ஆகிய தொழில்களில் நித்யா மகளிர் சங்கத்தின் உறுப்பினர்கள் ஈடுபடத் துவங்கினர். வங்கிக் கடனை தவணை தவறாமல் திரும்பச் செலுத்தி விட்டனர். பின்னர் மீண்டும் ரூபாய் ஐந்து இலட்சம் வங்கிக் கடன் பெறப்பட்டு அதை மூலதனமாகக் கொண்டு மேலும் கறவை மாடுகளை வாங்கினர். பின்னர் ரூபாய் எட்டு இலட்சத்தை வங்கிக் கடனாக பெற்று, செங்கல் சூளை, டிராக்டர், மாட்டு வண்டிகள் போன்றவை வாங்கப்பட்டன.

பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற்ற இக்குழுவினர், இடை நின்ற பள்ளி மாணவர்களை பள்ளியில் சேர்த்தல், கிராம கல்வி குழுவில் பங்கேற்றல், கழிப்பிட வசதி ஏற்படுத்தி அதன் முக்கியத்துவத்தை அறிவுறுத்தல் மற்றும் வளர்ச்சித் திட்ட பணிகள் மேற்கொள்ளல் போன்ற சமூக நலப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ■

பெரம்பலூர் மாவட்டம்

தேனீக்கள் வளர்ப்பு

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஒன்றியம், மலையாளப்பட்டி சாஸ்திரிபுரத்தை சார்ந்த பச்சமலை, மகிழம்பூ ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்களில் இருந்து 8 உறுப்பினர்களுக்கும், பூமிதானத்தை சேர்ந்த யமுனை மற்றும் கங்கை மகளிர் சுய உதவிக் குழுக்களில் இருந்து 7 உறுப்பினர்களுக்கும் தேனீக்கள் வளர்ப்பு குறித்த தொழிற்திறன் பயிற்சி பெரம்பலூர் மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகின் மூலம் சமீபத்தில் கோவை மாவட்ட காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தினரால் பயிற்சி வழங்கப்பட்டது.

மலையாளப்பட்டியிலேயே செய்முறைப் பயிற்சி வழங்கப் பட்டதாலும், இப்பகுதி தேனீக்கள் வளர்ப்பிற்கு உகந்தது என்பதாலும் பயிற்சியாளர்கள் ஆர்வத்துடன் தேனீ வளர்ப்புப் பயிற்சியில் கலந்து கொண்டனர். பயிற்சியின் போது இராணித் தேனீயுடன் தேனீ வளர்ப்புப் பெட்டி, தேன் பிழியும் கருவி, புகைப்பான் மற்றும் வலைத்தொப்பி போன்ற கருவிகள் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டன. ■

> தேனீ வளர்ப்பு குறித்த பயிற்சியினைப் பெற்று, தேனீக்கள் வளர்த்து அதன் மூலம் தேன் உற்பத்தியில் ஈடுபட்டு விற்பனை செய்வதால் மாதம் ரூ. 2000/– வரை வருவாய் ஈட்டலாம் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தொழிலில் ஊக்கத்துடன் ஈடுபட்டால் மேலும் அதிக அளவு வருவாய் பெற முடியும்.

B வைரஸ் கல்லீரல் அழற்சி

ஹெப்பட்டைடிஸ்-B



நாம் அதிகம் கேள்விப்படும் நோய்களில் முக்கியமானதும், ஆபத்தானதுமான நோய் B வைரஸ் கல்லீரல் அழற்சி (ஹெப்பட்டைடிஸ் B) நோயாகும். இதேபோன்று A, B, C, D, E என்று ஐந்து வகையான வைரஸ்கள் கல்லீரலை தாக்கி, மஞ்சள் காமாலை நோயை உண்டாக்கும் என்றாலும், இதில் B வகை வைரஸ்தான் ஆபத்தானது.

A, E வகை வைரஸ்கள் உணவின் மூலமும், கழிவுகள் மூலமும் பரவும். இவை சாதாரணமாகவே அதிக ஆபத்தில்லாதவை. இவைகளால் ஏற்படும் நோய் தாக்கம் 10 நாட்களில் தானாகவே சரியாகும். மற்ற மூன்று வகைகள், ஏறத்தாழ ஒரேமாதிரி பரவும் தன்மை உடையவை. B வைரஸ் பரவும் வகைகளையும், அவைகளால் ஏற்படும் தாக்கத்தையும் இனி காண்போம்.

நோய் பரவும் முறைகள்

நோய் தாக்கிய ஒருவர் பயன்படுத்திய ஊசியை மற்றவர் போட்டுக் கொள்ளும்பொழுது, அவருக்கும் எளிதாக நோய் தொற்றும். இரத்தம் கொடுக்கும் போது அதில் வைரஸ் இருப்பின் இரத்தம் ஏற்றப்படுவருக்கு நோய்த் தொற்று ஏற்படும். நோயுற்ற தாய்மார்களிடம் இருந்து வயிற்றில் உள்ள குழந்தைகளுக்கு நோய் பரவும்.

நோயின் அறிகுறிகள்

நோய்த்தொற்று ஏற்பட்டு 30 நாட்களில் முதல் அறிகுறிகள் தெரியத் தொடங்கும். முதலில் களைப்பு, அசதி, பசியின்மை, குமட்டல், சில சமயங்களில் வாந்தி போன்றவை ஏற்படும். உடம்பின் மேல்பகுதி யில் வலி இருக்கும். அடர்த்தி மிகுந்த மஞ்சள் நிற சிறுநீர் வெளிப்படும்.

கண்களின் விழி வெண்படலம், நகக் கண்கள், சவ்வுத் தசைகள், தோல் ஆகியவை மஞ்சள் நிறமடையும். தோல் அரிக்கும். உடலின் எடை வேக மாகக் குறையத் துவங்கும். சில சமயங்களில் 15 கிலோ வரை கூட எடை குறைவு ஏற்படும். கல்லீரல், மண்ணீரல் வீங்கத் தொடங்கும். சாதாரண நிலையில் தொட்டுப் பார்த்தால் தெரியாத கல்லீரல் மண்ணிரல் நன்றாகத் தொட்டு உணரும் நிலையில் இருக்கும். வலியும் இருக்கும்.

சரியான மருத்துவமும், சரியான அறிவும் இல்லாத நிலையில், நோய் முற்றி, நோயாளியின் மரணம் தவிர்க்க முடியாத நிலையை அடைய ஏதுவாகும். ஆனால் ஆரம்ப நிலையில் மருத்துவம் செய்து கொள்வதால் முழுக் குணமடையும் வாய்ப்பு ஏற்படும். சில நோயாளிகளுக்கு ஆபத்து அதிக மாகும் நிலைக்கு முன்பு கல்லீரல் பாதிப்பும், கல்லீரல் செல்கள் அழிவும், கல்லீரல் புற்று நோயாகவும் மாறும் அபாயம் உள்ளது.

மருத்துவ முறைகள்

நோயின் அறிகுறிகள் தெரியத் துவங்கிய உடனே, கட்டாய ஓய்வு, உணவுக் கட்டுப்பாடு போன்றவை உறுதியாகப் பின்பற்ற வேண்டும். நோயாளிக்கு பயன்படுத்தப்பட்ட ஊசிகளை அழித்து விட வேண்டும்.

எண்ணெய் மற்றும் கொழுப்பு பதார்த்தங் களையும், உணவு வகைகளையும் முழுமையாகத் தவிர்க்க வேண்டும். மாவுச் சத்துப் பொருட்களை அதிகம் உட்கொள்ளுவதன் மூலம் இழந்த சக்தியைப் பெறலாம்.

நோயாளியின் உடல் எதிர்ப்பு சக்தி குறைவதால் மற்ற நோய்கள் எளிதில் தொற்றிக் கொள்ளும். எனவே மருத்துவக் கண்காணிப்பு மிகவும் அவசியம். கல்லீரல் மேன்மேலும் மேலும் பாதிப்படைவதை தடுக்க மருத்துவக் கண்காணிப்பு உதவும்.

நோயைக் குணப்படுத்த நேரடியாக மருந்துகள் இல்லாவிட்டாலும், நல்ல ஓய்வு, நல்ல உணவு, கல்லீரலை பலப்படுத்தக் கூடிய மருந்துகள், நோயாளியின் உடலில் உண்டாகும் நோய் எதிர்ப்புச் சக்தி ஆகியவை நோயாளி குணமடைய உதவி செய்யும்.

சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ள கீழாநெல்லி இலைகளை அரைத்து உணவோடு சேர்த்து உண்ணலாம். இது மஞ்சள் காமாலை நோய்த் தொற்றை அழிக்க உதவும். மஞ்சள் கரிசலாங்கண்ணி பாதிப்படைந்த கல்லீரல் செல்களை புதுப்பிக்க உதவும்.

வைரஸ் கல்லீரல் அழற்சி நோய் ஆபத்தான ஒரு நோயாக இருந்தாலும், தடுப்பூசிகள் உள்ளன. இந்த தடுப்பூசிகள் முழுமையாக நோய் ஏற்படாமல் தடுக்கும் தன்மை வாய்ந்தவை. அதை போட்டுக் கொள்ளுதல் அவசியம். எல்லா மக்களும் இதை போட்டுக் கொள்ள வேண்டும் என மருத்துவத்துறையால் அறிவுறுத்தப்படுகிறார்கள். ■

வணிகம்

அழகிய கலைப் பொருட்கள்
கண்ணாத்தாள் மகளிர் சுய உதவிக் குழு
சிவகங்கை மாவட்டம்.
செல்பேசி : 94423 79809
விலை : ரூ. 50 முதல்

மரப் பொருட்கள்
சோழா மகளிர் சுய உதவிக் குழு
தஞ்சாவூர் மாவட்டம்
செல்பேசி : 94423 79809
விலை : ரூ. 75 முதல்

பித்தளை சிற்பங்கள்
தென்றல் மகளிர் சுய உதவிக் குழு
கோவை மாவட்டம்
செல்பேசி : 98422 75817
விலை : ரூ. 125 முதல்

அழகிய கைப்பைகள்
கலசம் மகளிர் சுய உதவிக் குழு
வேலூர் மாவட்டம்
செல்பேசி : 98656 59317
விலை : ரூ. 200 முதல்

மண் பொம்மைகள்
செல்வ விநாயகர் மகளிர் சுய உதவிக் குழு
காஞ்சிபுரம் மாவட்டம்
செல்பேசி : 97902 85758
விலை : ரூ. 50 முதல்

இளங்குன்னி இருளர் இன மக்களின் மறுமலர்ச்சி

மலர்ச்சிக்கு முன்

54 இருளர் குடும்பங்களைக் கொண்ட இளங்குன்னி குருமபப்பட்டி குடியிருப்பில் உள்ள மக்கள் மிகவும் ஏழ்மையான நிலையில், தங்களுடைய பிழைப்பிற்காக மரம் வெட்டுதல், செங்கல் சூளையில் செங்கல் அறுத்தல், மரம் நடுதல் ஆகிய வேலைகளுக்காக கோயம்புத்தூரில் கொத்தடிமைகளாகவும், தங்கள் பகுதிக்கு அருகில் உள்ள அரசு பண்ணை மற்றும் வனத்துறையிலும் வேலை செய்து தங்கள் பிள்ளைகளுடன் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வந்தனர்.

வருடத்தில் சில மாதங்களே தங்களது சொந்த ஊரான குருமபப்பட்டியில், காடுகளை நோக்கிச் சென்று களாக்காய் அறுத்தல், தேன் சேகரித்தல், கண்வலிக் கிழங்கு வெட்டுதல் போன்றவற்றை சேகரித்து வந்தனர். இதனால் சொந்த ஊரில் கிடைக்கக் கூடிய சலுகைகளும், சாதி சான்று, குடும்ப அட்டை, நிலப்பட்டா போன்றவைகள் கிடைக்கப் பெறாமலும், தங்கள் பிள்ளைகளின் படிப்பை தொடர முடியாத சூழ்நிலையிலும், குடிசை வீட்டில் வாழ்ந்து வந்தனர்.

> “கொத்தடிமைகளாகவும் நாடோடிகளாகவும் இருளில் வாழ்ந்த இந்த இருளர் இன மக்கள் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலமாக வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெற்று, தங்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சியைக் கண்டுள்ளனர்.”

மலர்ந்த பின்

அவர்களின் குடியிருப்புப் பகுதியில் வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்டு, அவர்களை குழுக்களில் இணையச் செய்து, ஆதார நிதி வழங்கியும், தனி நபர் கடனாக ஒரு குடும்பத்திற்கு குறைந்தது ரூ. 10,000/- வரை வழங்கியும், அவர்கள் வளர்ப்பதற்கு ஆடு, மாடுகள் வாங்கப்பட்டும், கடை வைத்தும் உள்ளூரிலேயே தொழில் செய்ய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு உள்ளது. அவர்களின் பிள்ளைகளை பள்ளியில் சேர்த்து, ஒவ்வொரு வருடமும் ஆடைகள் மற்றும் எழுது பொருட்கள் இலவசமாக வழங்கியும், பள்ளி பிள்ளைகள் 21 பேருக்கு அரசின் மூல மாக சாதி சான்றும் பெற்றுத் தரப்பட்டது.

அவர்களின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்ய மாவட்ட திட்ட மேலாளரின் முயற்சியால், மாவட்ட ஆட்சியரின் நேரடி பார்வைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு பார்வையிடப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் உதவியால் இவர்களுக்கு சென்ற ஆண்டு 22 தொகுப்பு வீடு மற்றும் அங்கிருந்த பாழடைந்த கிணறு சீரமைக்கப்பட்டு திறந்த வெளி கிணறு அமைக்கப்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்கப்பட்டது. மேலும் தொகுப்பு வீடு கட்ட நிதி இல்லாத சூழ்நிலையிலும் ரூபாய் 1000/- வீதம் கடன் வழங்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டது.

மேலும் 9 நபர்களுக்கு குடும்ப அட்டை, 11 பேருக்கு வாக்காளர் அடையாள அட்டை, 5 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகையும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் பெற்றுத் தரப்பட்டுள்ளது. இவை மட்டுமல்லாமல் கொத்தடிமைகளாக இருந்த 6 நபர்கள் மீட்கப்பட்டு அவர்களுக்கு தனி நபர் கடனாக ரூபாய் 10,000/- உள்ளூரில் தொழில் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ■

சக்சஸ் கோழிப் பண்ணை – பெரிய கோளப்பாடி

நாங்கள் பெரிய கோளாப்பாடி கிராமத்தில் மிகவும் ஏழைக் குடும்பத்தை சார்ந்த இளைஞர்கள். படித்து விட்டு வேலையில்லாமல் வேலை தேடிக் கொண்டிருந்தோம். இந்நிலையில் எங்கள் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் இளைஞர் தொழிற்குழு அமைத்தோம். வாழ்ந்து காட்டுவோம் இளைஞர் நிதியில் இருந்து ரூபாய் 50,000/– நிதி உதவி பெற்று எங்களுடைய பங்களிப்பாக ரூபாய் 50,000/– அளித்து சக்ஸஸ் கோழிப்பண்ணையை ஆரம்பித்தோம். இதில் நாட்டுக்கோழி, பிராய்லர் கோழி, கிரிராஜா கோழி குஞ்சுகளை வாங்கி வந்து வளர்த்து எங்கள் பகுதியை சுற்றி விற்பனை செய்து நல்ல இலாபம் ஈட்டி வருகிறோம். மேலும் கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வரும் நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு தேவைப்படும் கோழிக்குஞ்சுகளை வழங்கி வருகிறோம். ■

> கோழி வளர்ப்பு தொழில் செய்ய முன் வரும் மற்ற இளைஞர்களுக்கும் பயிற்சிகள் அளித்து, சுய வேலை வாய்ப்பு மேற்கொள்ள வழிகாட்டுகிறோம். எங்களை பெருமையுடன் வாழ வழிசெய்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாற்றுத் திறனில் மாற்றம் – முன்னூர் மங்கலம்

எங்கள் குழுவில் உறுப்பினர்களாக உள்ளவர்களில் 9 நபர்கள் மாற்றுத் திறனாளிகள், ஒருவர் நலிவுற்றோர். நாங்கள் அனைவரும் இணைந்து தையல் தொழில் குழுவினை ஏற்படுத்தினோம். இத்தொழில் குழுவிற்கு உறுதுணையாக பகுதி அலுவலக ஒருங்கிணைப்பாளர் உதவி புரிந்து எங்கள் பணியினை விரைவுபடுத்தி ஊக்கம் கொடுத்தார். தையல் தொழில் தெரிந்த மாற்றுத் திறன் உடையோர்கள் மற்றும் நலிவுற்றோர்கள் இணைந்து தையல் தொழிலில் ஈடுபடத் தொடங்கினோம்.

தேவையான இயந்திரங்கள் வாங்குவதற்கு மூலதனமாக சொந்த பங்களிப்பாக ரூ. 15,000/–ம், முன்னூர்மங்கலம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் ஒரு இலட்சம் ரூபாய் கடனாகப் பெற்று, 5 தையல் இயந்திரங்கள், ஒரு ஓவர்லாக் இயந்திரம் ஆகியவற்றை வாங்கி தொழில் ஆரம்பித்தோம். இன்று தையல் தொழிலை மேற்கொண்டு வருவதன் மூலம் நாங்கள் கணிசமான அளவில் நிரந்தரமான வருவாய் பெற்று வருகிறோம். ■

தற்போது நாங்கள் எங்கள் ஊனத்தை மறந்து மகிழ்ச்சியாகவும், மன நிறைவுடனும் வாழ்ந்து வருகிறோம். கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோமாதா எங்கள் குலமாதா

பாலியப்பட்டு

திருவண்ணாமலை மாவட்டம், பாலியப்பட்டு கிராமத்தில் நாங்கள் வசித்து வரும் நாங்கள் கூலி வேலை செய்து பிழைத்து வரும் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்கள். கூலி வேலை செய்து பிழைத்து வந்தோம். இந்நிலையில் எங்கள் பகுதியில் செயல்படும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் 70 இளைஞர்கள் குழுவாக ஒன்றிணைந்து 'கோமாதா பால் உற்பத்தியாளர் தொழில் கூட்டமைப்பு' என்ற பெயரில் கூட்டமைப்பினை உருவாக்கினோம்.

இதற்காக வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாநில அலுவலகத்தில் அதற்கான நிதியாக ரூபாய் 7 இலட்சம் பெற்று, மீதித் தொகையினை தொடக்க வேளாண்மை வங்கியில் கடனாகப் பெற்று கறவை மாடுகள் வாங்கி வளர்த்து அதன் மூலம் தினமும் 400 லிட்டர் பால் கொள்முதல் செய்து அனுப்புகிறோம். இதன் மூலம் நாங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் பெற்று வளமோடு வாழ்ந்து வருகிறோம். எங்கள் வாழ்விற்கு வழிகாட்டிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு நன்றி. ■

– கோமாதா பால் உற்பத்தியாளர் தொழில் கூட்டமைப்பு
பாலியப்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம்

அன்னமிடும் வளை கரங்கள்

அத்தியந்தல் ஊராட்சி

திருவண்ணமாலை மாவட்டம், அத்தியந்தல் ஊராட்சியில் வசிக்கும் நாங்கள், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வருவதற்கு முன்பு வாழ்க்கை நடத்துவதற்கு எங்கள் குடும்பத்தில் ஒருவருடைய வருமானத்தை எதிர்பார்த்து மிகவும் சிரமமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்தோம். கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் எங்கள் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட பிறகு தனித்தனியாக இருந்த நாங்கள் ஒன்றிணைந்து 'ஸ்ரீ ரமணா மகளிர் தொழில் குழு உணவகம்' என்னும் தொழில் கூட்டமைப்பினை உருவாக்கினோம். இதில் ஒரு குழுவிற்கு இரண்டு நபர்கள் வீதம் தேர்வு செய்து மொத்தம் 12 நபர்கள் இந்தத் தொழில் குழுவில் உள்ளனர்.

மகமையில் நடைபெறும் அனைத்து பயிற்சிகளுக்கும் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களில் நடைபெறும் குழு பயிற்சிகளுக்கும் உணவு வகைகளைத் தயார் செய்து கொடுத்து வருகிறோம். இதன் மூலம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் மாதந்தோறும் சுமார் ரூ. 2,000/– முதல் ரூ. 2,500/– வரை வருமானம் ஈட்டக் கூடிய அளவிற்கு எங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்தி யது வாழ்ந்து காட்டுவோம் திட்டம். ஊதுகோலாய் இருந்த எங்களை ஊன்று கோலாய் மாற்றிய மக்கள் கற்றல் மையத்திற்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ■

– ஸ்ரீ ரமணா மகளிர் தொழில் குழு உணவகம் தொழிற்கூட்டமைப்பினர்
அத்தியந்தல் ஊராட்சி, திருவண்ணமாலை மாவட்டம்.

> “எங்களுடைய மதிப்பு வீட்டிலும் ஊரிலும் உயர்ந்துள்ளது. இந்த வாய்ப்பை அளித்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.”

உயர்ந்தது மதிப்பு

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் நலிவுற்றோர் வாழ்வில் ஒளியேற்றும் திட்டம் என்கிறார் இத்திட்டத்தால் பயன் பெற்ற ஏ. ஆறுமுகம்

ஆறுமுகம் என்னும் நான் திருவண்ணாமலை மாவட்டம், பறையம்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். மிகவும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த நான் 8ஆம் வகுப்பு வரைதான் படித்துள்ளேன். தினமும் கூலி வேலை செய்து அதில் கிடைக்கும் வருவாயில் வாழ்க்கை நடத்தி வருகிறேன். என்னை ஊரிலும் சரி வீட்டிலும் சரி யாரும் மதிப்பதில்லை.மிகவும் மனவருத்தத்துடன் வாழ்ந்து வந்தேன்.

இந்நிலையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் காட்டாம்பூண்டி அரசு திருமண மண்டபத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட நான் ஓட்டுநர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். சம்பத்ராஜ் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியில் 45 நாட்கள் ஓட்டுநர் பயிற்சி பெற்று ஓட்டுநர் உரிமம் பெற்றேன். தற்போது எங்கள் பகுதியில் டிராக்டர் ஓட்டுநராகப் பணிபுரிந்து வருகிறேன். இதன் மூலம் மாத ஊதியமாக ரூ. 6,000/– பெற்று வருகிறேன். ■

– ஏ. ஆறுமுகம், பறையம்பட்டு கிராமம்

சிறப்பான வாழ்க்கை

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் குப்புசாமி.

திருவண்ணாமலை மாவட்டம், மதுரம்பட்டு கிராமத்தில் வசித்து வருபவர் எம். குப்புசாமி, இவர் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளார். முடி திருத்தும் தொழில் செய்து தனது குடும்பத்தை மிகவும் சிரமத்துடன் நடத்தி வந்தார். இந்நிலையில் இவரது கிராமத்தில் செயல்பட்டு வரும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் ஓட்டுநர் பயிற்சி பெற்று, சிறப்பாக பயிற்சியினை முடித்து வாகன ஓட்டுநர் உரிமமும் பெற்றார். தற்போது தனியார் மினி வேன் ஓட்டுநராகப் பணிபுரிந்து மாத ஊதியமாக ரூபாய் 4000/– வரை பெற்று வருகிறார். இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் இவரின் குடும்பம் ஏழ்மை நிலையிலிருந்து உயர்ந்தது. ■

> தற்போது தனது குடும்பத்தின் கடன் தொல்லையினை தீர்த்து, ஆலமரத்தின் விழுதுகளைப் போல் குடும்பத்தை தாங்கி பொறுப்புள்ள மனிதராக வாழ்ந்து வருகிறார் சுரேஷ். இத்தகைய வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு சுரேஷின் குடும்பத்தினர் மனதார நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

கடன் நீங்கி நிம்மதி பிறந்தது

திருவண்ணாமலை மாவட்டம், பாலியப்பட்டு ஊராட்சியில் வசித்து வருபவர்கள் கண்ணன் – சம்பூர்ணம் தம்பதியர். இவர்களுக்கு ஒரு மகனும் நான்கு மகள்களும் உள்ளனர். நான்கு மகள்களுக்கும் திருமணம் செய்து வைத்த கண்ணன் – சம்பூரணம் தம்பதியரால் தங்களது மகன் சுரேஷை 12ஆம் வகுப்பிற்கு மேல் படிக்க வைக்க முடியவில்லை.

இவர்களின் குடும்பத்திற்கு கடன் நிறைய இருந்தது. விவசாயக் கூலி வேலைக்கு சென்று அதில் கிடைக்கும் வருமானம் போதவில்லை. இதனால் சுரேஷ் மேற்கொண்டு படிக்க இயலாமல் கூலி வேலைக்கு சென்று வந்தார். போதாத வருமானம், கடன் தொல்லைகளும் ஏராளம் என்ற நிலையில் இருந்தது சுரேஷின் குடும்பம்.

இந்த நிலையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பயிற்சிகள் மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கப்படுவதை தெரிந்து கொண்ட சுரேஷ் ஓட்டுநர் பயிற்சிக்கு விண்ணப்பித்தார். கனரக வாகனம் ஓட்டும் பயிற்சியினைப் பெற்ற சுரேஷ், தற்சமயம் பாலியப்பட்டு – திருவண்ணாமலை இடையே ஓடும் மினி பஸ்ஸில் ஓட்டுநராகப் பணிபுரிந்து மாத ஊதியமாக ரூபாய் 5,500/– பெற்று வருகிறார். ■

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் வளமான வாழ்வு பெற்றோர் ஏராளம். அவர்களின் மனமுவந்த வாழ்த்துக்கள் அனைத்தும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மற்றும் வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கே உரித்தானது என்கிறார் திரு. சுரேஷ்.

ஓட்டுநரான ஜீவா

என் பெயர் ஜீவா, எனக்கு 21 வயது ஆகிறது. நான் திருவண்ணாமலை மாவட்டம் அழகானந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். குறைவாகப் படித்திருந்ததால் எந்த வேலைக்கும் செல்லாமல் ஊரைச் சுற்றி வந்தேன். இந்நிலையில் எங்கள் பகுதியில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வாயிலாக கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்படுவதை தெரிந்து கொண்டு ஓட்டுநர் பயிற்சிக்கு விண்ணப்பித்தேன்.

என்னை ஓட்டுநர் பயிற்சிக்கு தேர்ந்தெடுத்து, பயிற்சி அளித்தார்கள், பயிற்சி முடிந்தவுடன் ஓட்டுநர் உரிமம் பெற்றுத் தந்தார்கள். தற்போது நான் திருவண்ணாமலையில் வாடகை ஜீப் ஓட்டி வருகிறேன். இதன் மூலம் நான் தினசரி ரூபாய் 200/– முதல் ரூபாய் 300/– வரை வருவாய் பெற்று வருகிறேன். வேலை கிடைக்காத நாட்களில் எனது அண்ணனின் வாடகைக் காரினை ஓட்டுகிறேன்.

வெட்டியாக ஊரைச் சுற்றி வந்த நான் இப்போது நிலையான வருவாய் பெற்று நிம்தியாக வாழ்கிறேன். கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். ■

– ஜீவா, அழகானந்தல் கிராமம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

“எங்கள் ஊரில் உள்ள இளைஞர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளை செய்கிறேன். கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் குறித்து இளைஞர்களிடம் எடுத்து கூறுகிறேன். என்னுடைய வெற்றியை கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கு அர்ப்பணிக்கிறேன்.”

சாதிக்க வந்த பெண்மணி

என் பெயர் பரமேஸ்வரி, நான் திருவண்ணாமலை மாவட்டம் நல்லவன்பாளையம் ஊராட்சி ஏரிக்கரைப் பகுதியில் வசித்து வருகிறேன். மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு திருமணமாகி மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர். எனது கணவர் கூலி வேலைக்குச் செல்கிறார். போதிய அளவு வருமானம் இல்லாததால் மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தோம்.

ஏதாவது வேலைக்குச் சென்று வருமானம் ஈட்டலாம் என்று நினைத்து வந்தேன். அப்போது எங்கள் பகுதியில் செயல்பட்டு வரும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் ஓட்டுநர் பயிற்சி அளிக்கும் விபரத்தினை தெரிந்து கொண்டு, இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சிக்கு விண்ணப்பித்தேன். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ஆட்டோ ஓட்டுநர் பயிற்சி அளித்து ஓட்டுநர் உரிமம் பெற்றுக் கொடுத்தார்கள்.

தற்போது நான் வாடகை ஆட்டோ ஓட்டி வருகிறேன். நாள் ஒன்றுக்கு ரூபாய் 100/– முதல் ரூபாய் 150/– வரை வருவாய் கிடைப்பதால் எனது குடும்பத்தின் வறுமை நீங்கி கணவர் மற்றும் குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறேன். எங்கள் பகுதியில் செயல்படும் கூட்டமைப்பு மூலம் கடன் பெற்று சொந்தமாக ஆட்டோ வாங்க முயற்சித்து வருகிறேன். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ■

– திருமதி. பரமேஸ்வரி, நல்லவன்பாளையம் ஊராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம்

சுமையல்ல நான்

திருவண்ணாமலை மாவட்டம் தென்மத்தூர் ஊராட்சியில் வசித்து வரும் எனது பெயர் நடராஜ், நான் ஒரு மாற்றுத்திறனாளி. எனது ஒரு கால் செயலிழந்து விட்டது. என் குடும்பத்தில் என்னை பாரமாக நினைத்து வந்தார்கள். சாப்பாட்டிற்கே மிகவும் சிரமப்பட்டு வந்தேன். எங்கள் பகுதியில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்பாட்டிற்கு வந்த பிறகு அதன் மூலம் எனக்கு சிறிய பெட்டிக்கடை வைத்துக் கொடுத்தார்கள்.

அண்ணாமலைபுரம் பள்ளியை ஒட்டி எனது பெட்டிக்கடை உள்ளதால் குழந்தைகளுக்குத் தேவையான பென்சில், பேனா, நோட்டுப் புத்தகங்கள், தின்பண்டங்கள் போன்ற அனைத்தும் விற்பனை செய்து வருகின்றேன்.

மேலும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலமாக மூன்று சக்கர சைக்கிள் வாங்கிக் கொடுத்தார்கள். கடைக்குத் தேவையான பொருட்களை மூன்று சக்கர சைக்கிளில் சென்று வாங்கி வருகிறேன்.

இப்போது என்னை என் குடும்பத்தினர் சுமையாக நினைப்பது இல்லை. நான் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்கிறேன். எனக்கு வழிகாட்டிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கும், வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கம் நன்றி. ■

– திரு. நடராஜ், தென் மாத்தூர் ஊராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம்

வந்ததே சமுதாய அந்தஸ்து

திருவண்ணாமலை மாவட்டம், சோ. கீழ்நாச்சிப்பட்டு ஊராட்சியில் வசித்து வருபவர் திருமதி. இலட்சுமி. கணவனை இழந்த இவர் தினமும் கூலி வேலைக்குச் சென்று கூலியாகக் கிடைக்கும் 75/– ரூபாயில் குடும்பத்தினருக்கு போதிய உணவு கூட அளிக்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தார்.

மேலும் வாரத்திற்கு மூன்று அல்லது நான்கு நாட்கள்தான் வேலை கிடைக்கும் என்ற நிலை. எனவே திருமதி. இலட்சுமியின் குடும்பம் மிகவும் வறுமையில் வாடி வந்தது.

இந்த நிலையில் திருமதி. இலட்சுமிக்கு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் தனிநபர் கடனுதவியாக ரூபாய் 10,000/– வழங்கப்பட்டது. இத்தொகையினைக் கொண்டு வளையல், மணிகள் போன்றவற்றை வாங்கி விற்பனை செய்யத்துவங்கினார். பல்வேறு இடங்களில் நடைபெறும் கண்காட்சிகள் மற்றும் திருவிழாக்களில் கடை வைத்து விற்பனை செய்து வருகிறார்.

தற்போது திருமதி. இலட்சுமி தினசரி வருமானமாக ரூபாய். 200/– வரை பெறுகிறார். இத்தொகையினைக் கொண்டு தனது குடும்பத்தின் வறுமையினை நீக்கி வளமாக வாழ்ந்து வருகிறார். ■

சமுதாயத்தில் தனக்கு மரியாதையை உருவாக்கித் தந்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு நன்றி கூறுகிறார் திருமதி. இலட்சுமி.

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamil Nadu Corporation for Development of Women Ltd,
No: 100 Anna Salai, Guindy, Chennai – 600 032 (52,500 Copies circulated) an Printed by V. RAMESH, CHENNAI MICRO PRINT PRIVATE LTD,
New 130 Old no.34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai - 29. Editor: S.CHINNAPPAN.

Toll Free No. 18004191800
எச்.ஐ.வி. உள்ளவரும்
என்னைப் போன்ற மனிதர்களே
அவர்களுக்கும்
வளர, வாழ, படிக்க, பழக
உரிமை உண்டு
உரிமை காக்க
உடன் நிற்போம்
தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்
தொலைபேசி : 044–2819 0891, 2819 0467

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர்

வீடுகளில் கழிவறை கட்டிக் கொள்ள

ரூ. 2200

மானியம்

உங்களுக்குத் தெரியுமா!

- 1 கிராம் மலத்தில் 1 கோடி வைரஸ்கள், 10 இலட்சம் பாக்டீரியாக்கள், 1000 ஒட்டுண்ணிகள், 100 ஒட்டுண்ணி முட்டைகள் உள்ளன.
- திறந்த வெளியில் மலம் கழிப்பதால் காலரா, வயிற்றுப்போக்கு, மஞ்சள் காமாலை, சீதபேதி, இளம்பிள்ளை வாதம் போன்ற நோய்கள் பரவுகிறது.
- கழிவறையே சுக வாழ்வின் ஆதாரம்...
- திறந்தவெளியே நோய்களுக்கு அடையாளம்...

நேமம் ஊராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.

மணமேல்குடி ஊராட்சி
புதுக்கோட்டை மாவட்டம்

பொரசப்பட்டி ஊராட்சி
விழுப்புரம் மாவட்டம்

தனி நபர்
கழிப்பறையே
சுகாதார வாழ்வின்
முன்னேற்றம்...

தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள்:

திட்ட அலுவலகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
மற்றும் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ.),

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தமிழ்நாடு அரசு.